சான்லாக்ஸ்
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

**OPEN ACCESS**

Manuscript ID: TAM-09042025-8803

Volume: 9

Issue: 4

Month: April

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.01.2025

Accepted: 20.03.2025

Published: 01.04.2025

Citation:
Vijayakumar, B. "Nationalism in the Songs of Subramania Bharathi and Assamese Poets: A Cross-Cultural Comparison." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 4, 2025, pp. 54–59.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i4.8803

*Corresponding Author:
vijayakumar.ciil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Nationalism in the Songs of Subramania Bharathi and Assamese Poets: A Cross-Cultural Comparison

**B. Vijayakumar**
*Assistant Professor, Department of Modern Indian Languages and Literary Studies*
*Gauhati University, Guwahati, Assam*
*http://orcid.org/0000-0002-9915-192X*

**Abstract**

*India stands as a confluence of diverse languages, cultures, and traditions. Its literature, from ancient times to the present, reflects this diversity and has evolved in ways that express patriotism. Indian literature is a comprehensive collection of literary works composed in the various languages of India. It includes classical literature, ancient epics, devotional songs from the Bhakti movement, anti-colonial writings, post-independence literature, and modern social critiques. Indian literature, rich in linguistic diversity, serves as a significant medium for expressing social, cultural, political, and nationalistic ideas. Patriotism refers to a deep, selfless love and attachment to one's motherland. This has emerged as a prominent theme in many Indian literary traditions, particularly before and after the country's independence. In this context, Tamil and Assamese literatures feature numerous works where writers, drawing from their own socio-cultural backgrounds, have created literature centred on patriotism. This article explores how Tamil and Assamese literatures reflect patriotism in the post-independence and contemporary contexts of the Indian freedom movement, adopting a comparative approach to analyse key poets, poems, and the literary expressions of national consciousness.*

***Keywords:*** *Nationalism, Subramanya Bharathi, Ambikagiri Rai Choudhuri, Jyoti Prasad Agarwala*

**References**

1. Bharatiyar, Bharatiyar's Poems, Thirumagal Nilayam, Chennai, 2019.
2. Puliyur Kesigan, Purananuru, Saradha Publications, Chennai, 2015.
3. Ambikagiri Rai Choudhuri Rasanavali, Publication Board of Assam, Guwahati, 1986
4. Bishnu Prasad Rabha, Bishnu Prasad Rabha Rasona samb¬har, Rabha Rasana vali Prakashan sangha, Tezpur, 2008 (Vol.1 & Vol.2)
5. Bhuban Hazarikar Git Aru Jiban Rath, Dilip Kumar Dut¬ta, Ananta Hazarika, Guwahati, 2011
6. Jyoti Prasad Agarwala, Jyoti Prasad Rasanavali, Publication Board of Assam, Guwahati, 2007
7. Nalinibala Devi Rachanavali, Anjali Sarmah, Assam Prakashan Parishad, Guwahati, 2021
8. Rajaram M, I sing the glory of this land, Raja publications India Ltd. New Delhi, 2018
9. Visuvanathan Seeni. Subramany Bharati Poems, Publica¬tions, Chennai, 2013

# சுப்ரமணிய பாரதியார் மற்றும் அசாமி கவிஞர்களின் பாடல்களில் தேசப்பற்று: ஒரு பண்பாட்டு ஒப்பீடு

*முனைவர் பா. விஜயகுமார்*
உதவிப் பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும்
இலக்கியப் பயில் ஆய்வுத்துறை
குவகாத்திப் பல்கலைக் கழகம், அசாம்

***ஆய்வுச்சுருக்கம்***
*இந்தியா பன்முக மொழி, கலாச்சாரம், மரபுகளின் சங்கமமாக விளங்குகிறது. இலக்கியம், பண்டைய காலத்திலிருந்து தற்போதைய காலம் வரை பன்முகத்தன்மையைப் பெற்றிருப்பதோடு தேசப்பற்றை பிரதிபலிக்கும் வகையிலும் வளர்ந்து வந்துள்ளது. இந்திய இலக்கியம் என்பது இந்தியாவின் பல்வேறு மொழிகளில் படைக்கப்பட்ட இலக்கியங்களின் முழுமையான தொகுப்பாகும். இது பாரம்பரிய இலக்கியம், பழமையான காவியங்கள், பக்தி இயக்கப் பாடல்கள், காலனித்துவ எதிர்ப்பு எழுத்துக்கள், சுதந்திரத்திற்குப் பிந்தைய இலக்கியங்கள் மற்றும் நவீன சமூக விமர்சனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்திய இலக்கியம் பல்வேறு மொழிகளில் பன்முகத்தன்மை பெற்றிருப்பதோடு, அது சமூக, பண்பாட்டு, அரசியல் மற்றும் தேசப்பற்றுக் கருத்துக்களை வெளிப்படுத்தும் முக்கியமான கருவியாகவும் விளங்குகிறது. தேசப்பற்று என்பது தாய்நாட்டின் மீது கொண்ட நெஞ்சார்ந்த, தன்னலமற்ற பற்றைக் குறிக்கிறது. இது இந்தியாவின் பல்வேறு மொழி இலக்கியங்களில், குறிப்பாக விடுதலைக்கு முன்னரும் பின்னரும், முக்கியமான கருப்பொருளாக மிளிர்கிறது. அந்தவகையில், தமிழ் மற்றும் அசாமி இலக்கியங்களில், படைப்பாளர்கள் தங்கள் சொந்தச் சமூக-பண்பாட்டு பின்னணிகளின் அடிப்படையில், தேசப்பற்றைக் கருப்பொருளாகக் கொண்டு பல்வேறு படைப்புகளை உருவாக்கியுள்ளனர். இந்திய விடுதலை இயக்கத்தின் பிந்தைய மற்றும் தற்போதைய சூழலில் தமிழ் மற்றும் அசாமி இலக்கியங்கள் தேசப்பற்றை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதைக் கூறுவதோடு, முக்கியக் கவிஞர்கள், கவிதைகள், மற்றும் தேசிய உணர்வின் இலக்கிய வெளிப்பாடுகளை ஒப்பீட்டு அணுகுமுறையில் ஆராய்கிறது இக் கட்டுரை.*

***முக்கியச்சொற்கள்:*** *பாரதியார், அசாமியக் கவிஞர்கள், நாட்டு விடுதலை, கவிதைத் திறனாய்வு, காலனிய எதிர்ப்பு.*

## தமிழ் இலக்கியத்தில் தேசப்பற்று

தமிழ் இலக்கியங்கள் தொன்மையான பாரம்பரியம் கொண்டவை. இவ்விலக்கியங்களில் தேசப்பற்று என்பது அடிப்படையான நெறியாகவே இடம்பெறுகிறது. தமிழ்ச் சமூகத்தின் அரசியல், சமூக, கலாச்சார உணர்வுகளை தமிழறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் தம் படைப்புகளில் தெளிவாகப் பிரதிபலித்துள்ளனர். தேசம் என்ற கருத்து, தாயகத்தின் மேல் கொண்ட மரியாதை, பாசம், விடுதலை உணர்வு, கடமை உணர்வு போன்ற கூறுகளுடன் இணைந்து தமிழ் இலக்கியங்களில் உருவெடுத்துள்ளது.

பண்டைய சங்க இலக்கியங்களில் இருந்து ஆரம்பித்து இன்றைய நவீன இலக்கிய வரையிலும் தேசப்பற்று எப்போதும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற நூல்களில் வேந்தர் எப்படி தம் நாட்டைப் பாதுகாக்க, வளமாக்க

முயன்றார்கள் என்பதையும், வீரர்களின் தியாகத்தைப் புகழ்ந்தும் பாடல்கள் உள்ளதைக் காணலாம். யாதும் ஊரே யாவரும் கேளிர் (புறநானூறு-192) எனும் கணியன் பூங்குன்றனாரின் வரிகள், தமிழ் மக்களின் உலகப் பார்வையையும், ஒருங்கிணைந்த சமூக உணர்வையும் எடுத்துச் சொல்கின்றன.

காலப்போக்கில், தேசிய விடுதலை இயக்கம் தமிழில் புதிய எழுச்சியை உருவாக்கியது. சுப்பிரமணிய பாரதியார் போன்ற கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் இந்திய விடுதலையின் முக்கியத்துவத்தையும், ஒற்றுமையின் தேவைப்பாட்டையும் வலியுறுத்தினர். அவரது "சுதந்திரப் பெருமை", "பாரத நாடு", "எங்கள் நாடு" மற்றும் பஞ்சாலி சபதம் போன்ற பாடல்களில் தேசத்திற்காகவும், சமூக நீதிக்காகவும் எழுந்த போராட்டங்களின் அடையாளங்களைக் காணலாம்.

### சுப்பிரமணிய பாரதியார்

தமிழ் இலக்கியம், பண்டைத் தமிழரின் புகழ்மிக்க சிந்தனைகளை முதன்மையாகக் கொண்டதோடு, ஆங்கிலேயர் காலத்திலும் தேசிய உணர்வின் நெருப்பை ஊட்டியதில் முதன்மை வகிக்கிறது. இந்தப் பணியில், சுப்பிரமணிய பாரதியார் முக்கியமான கவிஞராகத் திகழ்கிறார். "மகாகவி" எனப் போற்றப்படும் அவர், இந்தியா மீது கொண்ட காதலையும் விடுதலை விருப்பத்தையும் அவரது கவிதைகளில் ஊட்டியுள்ளார். இந்தியா பல சமயங்கள், பல மொழிகள் உள்ள நாடு என்றாலும் உணர்வினால் அனைவரும் ஒன்றுபடுவதை,

**முப்பது கோடி முகமுடையாள் உயிர்**
**மொய்ம்புற வொன்றுடையாள் இவள்**
**செப்பு மொழி பதினெட்டுடை யாள்எனிற்**
**சிந்தனை ஒன்று உடையாள்.**
**(எங்கள் தாய்.பாரதி)**

என்று பாடுகிறார்.

இது பாரதியின் தேசப்பற்றையும், தேசத்தின் பெருமையும் உணர்த்துகிறது. ஜாதி, மத, இன வேறுபாடுகளால் மக்கள் ஒருவரையொருவர் எதிர்த்து சண்டையிடுவதைக் கண்ட பாரதி,

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே.**
**(தேசிய கீதங்கள். பாரதி)**

என்று தேசிய ஒருமைப்பாட்டின் வலிமையை கூறுகிறார். பாரதியின் தேசியப்பார்வை பாரத தேசத்தின் விடுதலையையை நோக்கியது,

**எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**யிருந்தது மிந்நாடே அதன்**
**முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து**
**முடிந்தது மிந்நாடே அவர்**
**சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து**
**சிறந்தது மிந்நாடே இதை**
**வந்தனைக் கூறி மனதி லிறுத்தியென்**
**வாயுற வாழ்த்தேனோ இதை**
**வந்தே மாதரம் வந்தே மாதரம்**
**என்று வணங்கேனோ.**
**(நாட்டு வணக்கம். பாரதி)**

என்று பாடுகிறார்.

தாய்நாட்டை பெருமையுடன் உயர்த்தி, அதற்கு ஈடு இணை எதுவுமில்லை என்கிறார். உலகிலுள்ள நாடுகளில் பாரத நாடு அறிவிலும், வீரத்திலும், மானத்திலும், கற்பிலும், இரக்கத்திலும், ஆன்மீகத்திலும் சிறந்த நாடு என்பதை,

**பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள்**
**பாரத நாடு. (தேசிய கீதங்கள்.பாரதி)**

என்று நாட்டின் பெருமைகளைப் கூறி நாட்டுப்பற்றை வளர்த்துள்ளார். அதுமட்டு மல்லாமல் "அச்சமில்லை அச்சமில்லை", "சுதந்திரப்பயிர்"ம், "வந்தேமாதரம்" போன்ற கவிதைகள், தேசத்தின் மீதான வீர உணர்வையும், அடிமைத்தனத்திற்கு எதிரான தைரியத்தையும் கொண்டுள்ளன.

### தேச விடுதலையும் பாரதியும்

தேச விடுதலைக்காக இந்திய மக்களை எவ்வாறெல்லாம் விழிப்புணர்வு அடையச் செய்ய வேண்டுமோ, அவற்றைத் தம் பாடல்கள் வழி அவர்களின் உள்ளத்தில் தணியாத சுதந்திர தாகத்தைப் பற்ற வைத்தவர் பாரதி. இந்திய மக்களுக்கு வேண்டியது

விடுதலையே அன்றி வேறொன்றும் இல்லை என்பதனை,

**வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்**
**வேறொன்று கொள்வாரே? என்றும்**
**ஆரமுது உண்ணுதற்கு ஆசை கொண்டார் கள்ளில்**
**அறிவைச் செலுத்து வாரோ?**
**(சுதந்திரப் பெருமை.பாரதி)**

என்ற பாடலில் குறிப்பிடுகிறார். ஏனெனில் விடுதலை வேட்கை எனும் பெரும்பயிரைத் தண்ணீர் விட்டு வளர்க்கவில்லை. தியாகிகளின் கண்ணீரை விட்டே வளர்த்தோம்.

**தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா இப்பயிரைக்**
**கண்ணீரால் காத்தோம்**
**(சுதந்திரப்பயிர். பாரதி)**

என்கிறார். அடிமைப்பட்டுக் கிடந்த தேசத்தின் விடுதலை தாகம் என்றைக்கும் தணியாது. எமது சுதந்திர தாகம் என்றைக்கும் அடங்கும்? இதனை,

**என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?**
**என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?**
**(சுதந்திரதாகம்.பாரதி)**

என்று வேதனையுடன் பாடுகிறார் பாரதி.

ஏழை - பணக்காரன்; உயர்ந்த சாதி - தாழ்ந்த சாதி; ஆண் - பெண் என்ற ஏற்றத்தாழ்வு ஒழிய வேண்டும். அனைவரும் சமம் என்ற விருப்பத்தைத் தாம் அடைந்ததாக மகிழ்ந்து பாடுகிறார்.

**ஏழை என்றும் அடிமை என்றும்**
**எவனும் இல்லை ஜாதியில்**
**இழிவு கொண்ட மனிதர் என்பது**
**இந்தியாவில் இல்லை**
**மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமையைக்கொ ளுத்துவோம்**
**(விடுதலை.பாரதி)**

இந்தியா விடுதலைக்குப்பின் இவையெல்லாம் நடைபெற வேண்டுமென விரும்பினார். தாயின் மணிக்கொடி பாரீர் பாடலில் பல்வேறு தேசிய இனங்களையும் ஒரு கொடியின் கீழ் ஒன்றிணைத்திருக்கிறார் பாரதி.

**கம்பத்தின் கீழ்நிற் றல்காணீர் - எங்கும்**
**காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்**
**நம்பற் குரியர் அவ்வீரர்: - தங்கள்**
**நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்**
**அணியணி யாயவர் நிற்கும் - இந்த**
**ஆரியக் காட்சியோர் - ஆனந்தம்**
**அன்றோ? (தாயின் மணிக்கொடி. பாரதி)**

என்று அவர்களுடைய உறுதியையும் ஒற்றுமையையும் சித்திரமாகக் காட்சிப்படுத்துகிறார் பாரதி. அதேபோன்று வடகிழக்கு இந்திய மொழியான அசாமி மொழியிலும் தேசப்பற்று மிக்க பாடல்களை கவிஞர்கள் பாடியுள்ளனர்.

## அசாமி இலக்கியத்தில் தேசப்பற்று

அசாமி இலக்கியத்தில் தேசப்பற்று, மொழி அடையாளம் மற்றும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போராட்டத்துடன் கூடிய உணர்வாக வளர்ந்துள்ளதைக் காணமுடிகிறது. அம்பிகாகிரி ராய்சவுத்துரி, நளினிபாலா தேவி, ஜோதி பிரசாத் அகர்வாலா, விஷ்ணு பிரசாத் ரவா, தேவ கண்ட பரூவா, ஆகியோர் அசாமிய இலக்கியத்தில் தேசப்பற்று மிக்க கவிதைகளைப் பாடியுள்ளனர். லக்ஷ்மிநாத் பேஸ்பரோவா அவர்களின் நையாண்டி மற்றும் சமூக சீர்திருத்தக் படைப்புகள், அசாமியர்களின் மொழி மற்றும் பண்பாட்டு உரிமைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டன.

ஜோதி பிரசாத் அகர்வாலா, ரூப்கொன்வார் என அழைக்கப்படும், அவரது "ஓ முர் அபுனார் தேஷ்'' (ஓ என் அன்புத் தாய்நாடு) என்ற பாடல், அசாமி மக்களின் தேசப்பற்றின் நிரந்தர சின்னமாக அமைந்தது. இது இன்று அசாம் மாநிலக் கீதமாகவும் உள்ளது. ஹிரேண் பட்டாசார்யா, புபேன் ஹஜாரிகா போன்றவர்கள் தங்கள் எழுத்துகளிலும், இசை மற்றும் பாடல்களிலும் சமூகநீதிப் பார்வையுடன் தேசிய உணர்வை வலியுறுத்தினர்.

### அம்பிகாகிரி ராய்சௌதுரி

அம்பிகாகிரி ராய்சௌதுரி அசாமிய இலக்கியம், கலாசாரம் மற்றும் அவர்களின் அரசியல் வாழ்வில் ஒரு முக்கியமான தலைவர். "அசாம்கேசரி" (அசாமின் சிங்கம்) என அழைக்கப்படும் அவர், தீவிர தேசப்பற்றாளரும், எழுத்தாளரும் ஆவார். அசாமியர்களின் அடையாளம் மற்றும் சுயமரியாதையை வலியுறுத்தி ஒரு ஆளுமைமிக்க மனிதர்.

அசாமில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற கலாசாரப் புத்துயிர்ப்பு இயக்கத்தில் முக்கிய பங்காற்றியவர்கள், கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் மற்றும் பேச்சுகளின் மூலம் தேசிய உணர்வை வளர்த்தார். துமி, அனுபூதி போன்ற கவிதைத் தொகுப்புகள் அவரது உணர்ச்சி மிகுந்த தேசப்பற்று மற்றும் அரசியல் விழிப்புணர்வை வெளிப்படுத்துகின்றன.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட இவர் "அசாம் சுயபாதுகாப்புப் படையை" (Assam Self& Defense Force) நிறுவினார் மற்றும் சுதேசி இயக்கத்திலும் முக்கிய பங்காற்றினார். அசாமிய மக்களின் பொருளாதார நிலையை ஊக்குவிக்கவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர் ஆற்றிய பணி பாராட்டத்தக்கது. அவரது இலக்கியச் சாதனைக்காக 1965ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமி விருது "அனுபூதி" கவிதைத் தொகுப்புக்குவழங்கப்பட்டது.அவர்அசாமிய இளைஞர்களை விழிப்படையச் செய்ய

**எழு, வெந்து எழு,**
**புதிதாய் உருவாக்க**
**உன் கை ஒருக்கல் உரமாய் செயல்படட்டும்.**
**சொந்த நாட்டின் சேவையில்**
**பொய்மைகள் எல்லாம்**
**சிதறி விழட்டும் தூசியாக**
**இளம் ரத்தமே விழித்தெழு, இன்றே விழித்தெழு!**
**(இளம் வீர்களே. அம்பிகாகிரி ராய்சௌதுரி)**

என்று பாடுகிறார், அம்பிகாகிரி ராய்சௌதுரி ஒரு கவிஞராகவோ விடுதலைப் போராளியாகவோ மட்டும் அல்லாமல், அசாமிய தேசியக் களத்தில் உயிரோடிருக்கும் அடையாளமாகவே நினைவு கூரப்படுகிறார்.

### ஜோதி பிரசாத் அகர்வாலா

ஜோதி பிரசாத் அகர்வாலா அவர்கள் அசாமியர்களால் மிகவும் விரும்பப்படும் தலைவர்களில் ஒருவர். கவிஞர், நாடக ஆசிரியர், பாடலாசிரியர், இசையமைப்பாளர் மற்றும் திரைப்பட இயக்குநராக, அவர் தனது படைப்புகளின் மூலம் நவீன அசாமிய அடையாளத்தை உருவாக்க உதவியவர். ரூப்கொன்வர் (அழகின் இளவரசர்) என அழைக்கப்படும் அவர், தனது கவிதைகளில் மூலம் சமூக மற்றும் அரசியல் மாற்றத்தின் நேரங்களில் மக்களின் இதயங்களை உலுக்கியவர்.

அகர்வாலாவின் கவிதைகள் இசை நயமும், உணர்ச்சி ஆழமும், தேசப்பற்றும் நிரம்பியவை. அவரது எழுத்துகள் காதல் உணர்வுகளையும் புரட்சித் தத்துவங்களையும் ஒன்றிணைத்துப் புதிய, சமூகத்துக்காகக் கனவு காண அசாமிய இளைஞர்களை ஊக்குவித்தன. அவரது கவிதைகள் இயற்கை அழகு, மற்றும் எதிர்காலத்தின் நம்பிக்கையை பேசுகின்றன. அவரது "ஜோதி ரசனாவலி" தொகுப்பில் புகழ்பெற்ற கவிதைகளும் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. "லுயிட்டோர பார்", "மோர் தேஷ்", மற்றும் "வந்தே மாதரம் (அசாமிய மொழிபெயர்ப்பு) போன்றவை இன்று வரை பாடப்பட்டு, மக்களிடையே பெருமையும் ஒற்றுமையும் தூண்டுகின்றன. அந்தவகையில்,

***தயாராகுங்கள், இளம் வீரர்களே!***
***தயாராகுங்கள்!***
***அக்கினிக் குளியல் செய்ய வேண்டிய நேரமிது.***
***உயிர் காக்க போர்க்களம் புகுந்திடுங்கள்***
***வெற்றிச் சங்கு ஊதி***

***உலகத்தை அதிரச் செய்யுங்கள்***
***அத்துமீறல் அழிந்திடட்டும்.***
***தேசத்திற்காக***
***இனியதொரு வீரமரணம்***
***(புறப்படுங்கள்.ஜோதிபிரசாத் அகர்வாலா)***

*என்ற கவிதை அகர்வாலாவின் கவிதைத் இளஞர்களை ஊக்குவிப்பதில் உள்ள திறமை, சிக்கலான விடயங்களை எளிய மொழியில் எடுத்துரைக்கக் கூடிய ஆற்றல் ஆகியன வெளிப்படுவதைக் காணலாம். அவரது கவிதைகள் மட்டும் அல்லாமல், அவரது சிந்தனைகளும் அசாமின் மக்கள் நினைவிலும் நெஞ்சிலும் இன்றளவும் நிலைத்து வாழ்கின்றன.*

## ஒப்பீட்டுப் பார்வை

*தமிழ் மற்றும் அசாமி இலக்கியங்கள், வெவ்வேறு சமூக-பண்பாட்டு சூழல்களில் உருவான போதிலும், தேசப்பற்றை வெளிப்படுத்தும் விதங்களில் ஆழமான ஒற்றுமைகள் உள்ளன. இரண்டிலும் தேசம் ஒரு தாயாகக் காணப்படுகிறது. பாரதியின் பாரதமாதா ஒரு தெய்வீக உருவாக விளங்க, ஜ்யோதி பிரசாத் அகர்வாலாவின் பாடல்களில் அசாம் ஒரு உயிர்மிகு தாய்நாடாகத் தோன்றுகிறது. இந்தக் கவிஞர்கள் இருவரும் தங்களது சமூகச் சூழலைக் கடந்து, தாய்நாட்டின் மேன்மையை மக்களிடம் ஊட்டும் பணியை மேற்கொண்டுள்ளனர். மேலும், தமிழ் இலக்கியத்தில் சாதி ஒழிப்பு, பாலின சமத்துவம் போன்ற சமூக சீர்திருத்தக் கோணங்களோடு தேசப்பற்று இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது; அசாமி இலக்கியங்களில் மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்களை பாதுகாக்கும் நோக்குடன் தேசப்பற்று வெளிப்படுகிறது.*

*இரு இலக்கியங்களும் தேசப்பற்று பாடல்களின் வழியாக மக்களின் உள்ளங்களைத் தொடுகின்றன. மக்கள் உணர்வுகளைத் தூண்டக்கூடிய வழிகள், தேசப்பற்றை சாதாரண வாழ்க்கையுடன் உறவுபடுத்துகின்றன. அதேசமயம், இரு இலக்கியங்களும் ஆங்கிலேயர் கால அடக்குமுறைக்கு எதிராகவும், தங்களது மொழி, பண்பாடு, சமூகநீதி ஆகியவற்றிற்கான உரிமைகளை வலியுறுத்தும் எழுத்துக்களாகவும் உள்ளன. இவ்வாறான எழுத்துகள் ஒவ்வொரு மக்கள் சமூகத்திலும் விழிப்புணர்வையும், உறுதியும் ஊட்டியன. இதனால், தமிழ் மற்றும் அசாமி எழுத்தாளர்களின் தேசப்பற்று, தனிப்பட்டவர்களின் உணர்வுகளைத் தூண்டி, சமூக விழிப்புணர்வு மற்றும் பண்பாட்டு அடையாளக் காக்கும் இயக்கங்களாக வலுப்பெறக் காரணமாயின.*

## தொகுப்புரை

*தமிழும் அசாமியுமாகிய இரு மொழிகளின் இலக்கியங்களில் தேசப்பற்று என்பது, வெறும் நாட்டின்மீது உள்ள அன்பு மட்டுமல்ல; அது ஒரு மக்களின் உணர்வுப்பூர்வ வரலாறும், நெடுங்காலப் பண்பாட்டு நினைவுகளும், போராட்டத்தின் குரலும் ஆகும். இது அரசியல் மட்டுமல்லாமல் மொழி, சமூகம், மற்றும் கலையின் வழியாக மக்களின் மனங்களில் பதியப்பட்டுள்ளது. தேசியத்தோடு பிராந்திய அடையாளம் பேணப்படும் இச்சூழலில், சுப்பிரமணிய பாரதி மற்றும் அம்பிகாகிரி ராய்சவுத்துரி, நளினிபாலா தேவி, ஜோதி பிரசாத் அகர்வாலா, விஷ்ணு பிரசாத் ரவா, தேவ கண்ட பரூவா, ஆகியோரின் இலக்கியங்களை வாசித்தல், இந்தியாவின் பன்முகத் தன்மையில் ஒருமைமிக்க தேசப்பற்றை மனங்களில் வலுப்பெறச்செய்கிறது.*

## சான்றாதரங்கள்


1. *பாரதியார், பாரதியார் கவிதைகள், திருமகள் நிலையம், சென்னை, 2019.*
2. *புலியூர்க்கேசிகன், புறநானுறு, சாரதா பதிப்பகம், சென்னை. (2015)*